

தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் அவர்களின் நேர்முக உதவியாளர் மணி அவர்களது இல்லவிழாவில் முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் பங்கேற்றார். நிகழ்வில் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், மாநகர இலக்கிய அணி ஜீவன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் அவர்கள் முன்னிலையில் த.வெ.க.வை சேர்ந்த தூத்துக்குடி 8வதுவட்ட துணை செயலாளர் முனியப்பா தலைமையில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் தங்களை கழகத்தில் இணைத்துக்கொண்டனர். நிகழ்வின் போது மாநகர் திமுக செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், சந்தனராஜ், இசக்கிமுத்து, கருப்பணன், ராஜேந்திரன், பாலு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் மேலப்பாவூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவியர்களுக்கு போதுமான கழிப்பறை வசதி இல்லை என்று பள்ளி தலைமை ஆசிரியர் கொடுத்த கோரிக்கை மனுவை ஏற்று ரூபாய் 10 லட்சம் நிதி ஒதுக்கிய தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவனை சட்டமன்ற அலுவலகத்தில் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் நேரில் வருகை தந்து நன்றி தெரிவித்தனர்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்து விருதுநகர் மண்டலம் ஓய்வுபெற்ற ஊழியர் முன்னேற்ற சங்கத்தின் தொ.மு.ச. பொதுக்குழு கூட்டம் சங்க தலைவர் சுப்பாரெட்டி தலைமையிலும், சிறப்பு அழைப்பாளர்களாக தொ.மு.ச. போக்குவரத்து கழக கூட்டமைப்பின் பொருளாரும், திருநெல்வேலி மண்டல பொதுச்செயலாளர் தர்மன், தொ.மு.ச.விருதுநகர் மண்டல பொதுச்செயலாளர் ரா.ராஜசெல்வம், சிமிண்ட்ஸ் மாநில பொதுச்செயலாளர் சௌந்தரராஜன், மண்டல பொதுச்செயலாளர் ஆர்.வி. மாடசாமி முன்னிலையிலும் மற்றும் பொருளாளர் பாண்டியன் , மற்றும் டாஸ்மாக் பொதுச்செயலாளர் S . வளவந்தான் , சங்கத்தின் நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா 118ஆம் ஆண்டு பிறந்த நாள் ஊர்வலம்!

### முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெறுகிறது

திருவண்ணாமலை, செப்.14-

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 118ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா ஊர்வலம் நடைபெறுகிறது. ஊர்வலத்திற்கு முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமையேற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலக தமிழர்களின் உள்ளங்களிளெல்லாம் சிம்மாசனம் போட்டு, கொலுவீற்றிருக்கும் செந்தமிழறிஞர் தமிழ்மொழி உணர்வுக்காகவும், தமிழர் மேம்பாட்டிற்காகவும், தமிழ்நாட்டின் சிறப்பிற்காகவும், வாழ்நாளெல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்துவைத்த ஆற்றலாளர். இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்று தம்பியர் பெரும்படை கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன், மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்து, தாய்க்கு பெயர் தந்த தனிபெரும் தனயன் சுயமரியாதை சுடரொளி சொக்கவைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப்பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா ஊர்வலம் நடைபெறவுள்ளது.

15.09.2026 செவ்வாய்க்கிழமை காலை சரியாக 9.00 மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி சிலை அருகிலிருந்து, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்த விழா ஊர்வலம் நடைபெறவுள்ளது. ஊர்வலத்திற்கு முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சரும், சட்டமன்ற கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் தலைமையேற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொன்.முத்து, மாவட்ட துணை செயலாளர் மு.பெ.கிரி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், சிவ.ஜெயராஜ், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், மாநில அமைப்பு சாரா அணி ஏ.ஏ. ஆறுமுகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



புதூர் ஊராட்சி ஒன்றியம், இராமச்சந்திராபுரம் கிராமத்தில் நடுநிலைப்பள்ளியில் ரூ.30லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் பள்ளி செயலர் வழக்கறிஞர் சீத்தாராமன், பள்ளி நிர்வாகி சுப்புலட்சுமி, பள்ளித் தலைமை ஆசிரியர் வீரமணி,விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், உள்ளிட்ட ஆசிரிய ஆசிரியைகள்,மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் வடக்கு காவலாக்குறிச்சியில் ஒன்றிய பொது நிதியிலிருந்து கட்டப்பட்ட கலையரங்கத்தை தென்காசி மரு. கலை கதிரவன் எம்.எல்.ஏ. தலைமையில்,முன்னாள் மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாதன், ஒன்றிய குழு உறுப்பினர் முத்துமாரி ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திவ்யா மணிகண்டன் திறந்து வைத்தார்.ஊராட்சி மன்ற தலைவர் பாலசுப்பிரமணியன் வரவேற்றார்.



திருப்புவனம் மேற்கு. தெற்கு. பேரூர். தி.மு.க. செயற்குழு கூட்டம் மருது பாண்டியர் திருமண மண்டபத்தில் அவைத் தலைவர் இளங்கோவன் தலைமையில் ஒன்றிய செயலாளர் வசந்தி சேங்கைமாறன்.பேரூர் கழக செயலாளர் நாகூர்கனி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் சிறப்புரையாற்றினார். ரகமத்துல்லாகான். பொற்கோ. சங்கங்குளம் ஈஸ்வரன். மாங்குடி வெங்கடேசன். லாடனேந்தல் சுப்பையா. சொட்டதட்டி சக்தி முருகன். புலியூர் ரவி. கரிசல்குளம் ராமு. கீழடி சங்கர். மடப்புரம் மகேந்திரன். பிரமனூர் அறிவுகரசு. கண்ணன். பாண்டிய கிருஷ்ணன். ராஜ்மோகன் புவனேஸ்வரன் மற்றும் கலந்துகொண்டார்கள்.




தேனி வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் தேனியில் தனியார் மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் பிடி செல்லப்பாண்டியன் தலைமையில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. உரையாற்றினார் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு உரையாற்றினார் தலைமை கழக பிரதிநிதி சட்டதிட்ட குழு இணை செயலாளர் சுபா சந்திரசேகர் தலைமை கழக பிரதிநிதி மாநில வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர எல். மூக்கையா மாவட்ட துணை செயலாளர் செந்தில் முருகன், திருக்கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் முருகேசன் தெய்வேந்திரன் ராஜாரமேஷ் மற்றும் ஒன்றிய செயலாளர் நகர செயலாளர்கள் பேரூர் செயலாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு அரசின் 2026ம் ஆண்டிற்கான நல்லாசிரியர் விருது பெற்ற இராமனூத்து பள்ளி தலைமை ஆசிரியர் இப்ராஹிம் அவர்கள் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்க்கண்டேயனை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.உடன் விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, வடக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சென்றாய பெருமாள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.